## சுருக்கம்

நிர்வாகம் – செய்தி மக்கள் தொடர்புத் துறை – பத்திரிகையாளர் ஓய்வூதியம் – பத்திரிகைத் துறையிலிருந்து ஓய்வு பெற்று நலிந்த நிலையிலுள்ள திரு. லெ.ராமதாஸ் அவர்களுக்கு மாத ஓய்வூதியம் ரூ.6,000/– வழங்க ஆணை–வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (நிர்வாகம்–4)த் துறை

அரசாணை (நிலை) எண்.74

நாள் 07.03.2013
திருவள்ளுவர் ஆண்டு 2044
நந்தன வருடம், மாசி 23 ம் நாள்
படிக்கப்பட்டது:

1. அரசு ஆணை (நிலை) எண்.191 தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும் செய்தி (நிர்வாகம்–4)த் துறை, நாள் 14.09.2011
2. சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித எண். இது/36864/11, நாள் 09.05.2012
3. பத்திரிகையாளர் ஓய்வூதியம், பத்திரிகையாளர் குடும்ப ஓய்வூதியம் மற்றும் குடும்ப உதவி நிதி பரிந்துரைக்குழு கூட்ட குறிப்புகள் நாள். 7.01.2013.

•••••

**ஆணை:**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் ஓய்வுப் பெற்ற பத்திரிகையாளர்களுக்கு மாத ஓய்வூதியம் ரூ.6,000/– ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் திரு. லெ.ராமதாஸ் அவர்கள் பத்திரிகையாளர் ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெற நிர்ணயிக்கப்பட்ட நிபந்தனைகள் அனைத்தையும் பூர்த்தி செய்துள்ளார் என்றும், மேலும் அன்னாரின் உரிய சான்றிதழ்கள் அனைத்தும் ஆய்வு செய்யப்பட்டது என்றும் தெரிவித்து, திரு. லெ.ராமதாஸ் அவர்களுக்கு பத்திரிகையாளர் ஓய்வூதியம் வழங்கலாம் என பரிந்துரை செய்துள்ளார்.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட பத்திரிக்கையாளர் ஓய்வூதியம், பத்திரிக்கையாளர் குடும்ப ஓய்வூதியம் மற்றும் குடும்ப உதவி நிதி பரிந்துரை குழுவின் குறிப்பில் 21.12.2012 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் ஓய்வூதிய பரிசீலனைக் குழு கூட்டத்தில் திரு. லெ.ராமதாஸ் அவர்களுக்கு பத்திரிகையாளர்களுக்கான ஓய்வூதியம் வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

4. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், ஓய்வு பெற்ற பத்திரிகையாளர் திரு. லெ.ராமதாஸ் அவர்களுக்கு மேலே 2 மற்றும் 3ல் படிக்கப்பட்ட மாவட்ட ஆட்சியர் சென்னை மற்றும் பத்திரிக்கையாளர் ஓய்வூதியர் பரிசீலனைக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மேலே 1–ல் படிக்கப்பட்ட அரசாணையின்படி மாத ஓய்வூதியம் ரூ.6,000/– (ரூபாய் ஆறாயிரம் மட்டும்) இவ்வரசாணை வெளியிடப்படும் நாள் முதற்கொண்டு வழங்க அரசு ஆணையிடுகிறது.

5. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினமானது 2013–14ஆம் ஆண்டுக்கான வரவு–செலவு திட்ட மதிப்பீட்டில் உள்ள நிதியொதுக்கத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும் இச்செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:

> “2235. சமூகப் பாதுகாப்பும் நலனும்–60. ஏனைய சமூகப் பாதுகாப்பு நலத் திட்டங்கள் – 102. சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்படும் ஓய்வூதியம் –I திட்டத்தில் சேராதது – AH. தமிழ்நாட்டிலுள்ள பத்திரிகையாளர்களுக்கு ஓய்வூதிய சலுகை வழங்கும் திட்டம்–27. ஓய்வூதியங்கள்–05, சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியங்கள்”(த.தொகு.2235 60 102 AH 2750)

6. மேலே பத்தி 4-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூ.6,000/- (ரூபாய் ஆறாயிரம் மட்டும்)-*ஐ* திரு. லெ.ராமதாஸ் அவர்களுக்கு பெற்றுத் தர உரிய ஆணை பிறப்பிக்கும் அதிகாரம் சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலருக்கு அளிக்கப்படுகிறது.

7. ஓய்வூதியம் பெறும் பத்திரிகையாளரின் நிதி நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டாலோ அல்லது இயற்கை எய்தினாலோ, அது குறித்த முழுமையான அறிக்கையினை சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர், இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர், சென்னை-9 அவர்களுக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

8. இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர், சென்னை-9 அவர்களால் மேலே பத்தி 4-ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட ஓய்வூதியம் குறித்த விவரங்களை உரிய முறையில் பராமரிக்கப்பட வேண்டும்.

9. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா்பற்ற எண்.11334/நிதி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை/2013, நாள் 06.03.13 -ன்படி ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மூ.இராசாராம்,
அரசு செயலாளர்.

பெறுநர்
திரு. லெ.ராமதாஸ்,
நெ.46. பத்திரிகையாளர்கள் குடியிருப்பு,
திருவான்மியூர், சென்னை-600 041.
மாவட்ட ஆட்சித் தலைவர், சென்னை.
ஆணையாளர், கருவூல கணக்குகள் துறை, சென்னை-35.
மாநில முதன்மை கணக்காயர், கணக்குகள் (ம) பணிவரவு, தமிழ்நாடு, சென்னை-18.
மாவட்ட கருவூல அலுவலர், சென்னை.
ஓய்வூதியம் வழங்கும் அலுவலர், ஈ.வி.கே.சம்பத் மாளிகை, சென்னை-6.
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு இணைச் செயலாளர்,
செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9

நகல்:
நிதி (தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி)த் துறை, சென்னை-9.
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (வரவு-செலவு)த் துறை, சென்னை-9.
செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, சென்னை-9.
இ.கோ/உதிரி நகல்கள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

11.3.13
பிரிவு அலுவலர்

17/3/13